2023 அக்டோபர் மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 34 / 2020*

*2023 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 26– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 2, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. S.மகாலட்சுமி,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 2, சந்திரசேகரன் |
| தகப்பனார் பெயர் | : | சுப்பு |
| ஊர் | : | திருச்சி |
| வட்டம் | : | திருச்சி |
| மாவட்டம் | : | திருச்சி |
| தொழில் | : | மருத்துவப்பதிவேடு மேலாளர் |
| வயது | : | 67 |

தேதி: 26.10.2023.

**<u>முதல் விசாரணை :–</u>**

நான் தற்போது திருச்சி காவேரி மருத்துவமனையில் மருத்துவப்பதிவேடு மேலாளராக பணிபுரிகின்றேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்தில் காயம்பட்ட ராஜ்குமார் த/பெ. சின்னசாமி, என்பவர் எங்கள் மருத்துவமனையில் கடந்த 22.12.2019 –ம் தேதி முதல் 02.01.2020 –ம் தேதி வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அவர் சிகிச்சை பெற்று விடுவிக்கப்பட்டதற்கான விடுவிப்பு சான்று மற்றும் மருத்துவக்குறிப்புகள் **ம.சா.ஆ.17,** மனுதாரர் சிகிச்சை பெற்றதற்கான செலவுகள் ரூ.3,63,718/–ஆகும். அதில் அரசு ஊழியர் காப்பீட்டு அட்டையின் மூலம் ரூ.3,11,065/– செலுத்தப்பட்டுள்ளது. மீதித்தொகை ரூ.52,317/–ஐ மனுதாரர் பணமாக செலுத்தியுள்ளார்.அது **ம.சா.ஆ.18,** மீண்டும் 2–வது முறை மனுதாரர் 29.01.2020–ம் தேதி முதல் 30.01.2020 வரை எங்கள் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். அதற்குண்டான செலவுகளாக ரூ.24,965/–ஐ மனுதாரர்

நேரடியாக பணமாக செலுத்தியுள்ளார். அது **ம.சா.ஆ.19** ஆகும். ம.சா.ஆ.8– ல் உள்ள புறநோயாளி ரசீதுகள் எங்கள் மருத்துவமனையில் வழங்கியுள்ளது தான். ம.சா.ஆ.8– ல் கண்ட தொகைகள் தற்பொழுது நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.17 மற்றும் ம.சா.ஆ.18 ரசீதுகளில் சேர்க்கவில்லை.

**ஒப்பம்/– எம். மூர்த்தி,**
**தலைமைக்குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**